**சுருக்கம்**

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 நாளிட்ட செய்தி வெளியீடு – "வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு திருமண உதவித் தொகை வழங்கப்படும்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு நிருவாக அனுமதி அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொது(மறுவாழ்வு.2(2))த் துறை**

**அரசாணை(நிலை)எண்.514** **நாள்.18.08.2023.**
சோப கிருது வருடம், ஆவணி–1
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசுக் கடித எண்.23048/ம.வா.2(2)/2022–4, நாள் 03.05.2023.
3. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ1/7171/2018, நாள் 09.06.2023

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

**"வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்"**

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காணும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக உரிய திருத்திய கருத்துரு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் கோரப்பட்டது.

த.பி.பா..

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் பிற நல வாரியங்களில் ஒன்றான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் திருமண உதவித்தொகை திட்டத்தின் அடிப்படையில் கீழ்கண்ட கருத்துருவினை அரசிற்கு சமர்ப்பித்துள்ளார்:-

**அ.நோக்கம்:**

அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன் / மகளுக்கு சிறந்த எதிர் காலத்தினை உருவாக்குவதும், அங்கீகரிக்கப்பட்ட வயதில் திருமணம் செய்வது, திருமணத்தின் பொருட்டு ஏற்படும் எதிர்பாராத கூடுதல் செலவீனம் காரணமாக அவர்களின் குடும்பத்தினர் கடனில் சிக்கித் தவிப்பதை தடுப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**ஆ. தகுதி:**

அயல்நாடுகளில் பணிபுரிந்து அங்கு மரணமடைந்த குறைந்த வருவாய் பிரிவை சேர்ந்த தமிழர்களின் மகன் / மகளுக்கு இத்திட்டம் பொருந்தும்.

i. தமிழ்நாடு அரசின், 10ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். பழங்குடியினர் 5ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் போதுமானது.
ii. திருமணத்தின் போது மணமகன்-21 வயது / மணமகள்-18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.
iii. இத்திட்டம் முதல் திருமணத்திற்கு மட்டும் வழங்கப்படும்.

**இ. உதவித்தொகை விகிதம்**:

அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன் / மகளுக்கு திருமண உதவி தொகையாக ரூ.20,000/- வழங்கப்படும்.

**ஈ. உதவித்தொகைக்கான நிபந்தனைகள்:**

i. அயலகத் தமிழர் நலவாரியத்தில் பதிவு பெற்று, பதிவு காலாவதியாகாமல் உள்ள (இறப்பின் போது) அயலகத் தமிழரின் மகன் அல்லது மகளுக்கு வழங்கப்படும்.

ii. ஒரு குடும்பத்தில் இரண்டு நபர்களுக்கு மேல் உதவித்தொகை வழங்கப்படாது.

iii. தவறான அறிக்கை / சான்றிதழ்கள் மூலம் உதவித்தொகை பெற்றிருப்பது கண்டறியப்பட்டால், அவரது உதவித்தொகை உடனடியாக ரத்து செய்யப்பட்டு, அவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் செலுத்தப்பட்ட உதவித்தொகை திரும்பப் பெறப்படும்.

iv. தகுதியுடைய நபர்களுக்கு உதவித்தொகையினை வழங்குவதற்கு தேவையான விரிவான நடைமுறையினை அயலகத் தமிழர் வாரியத்தால் வகுக்கப்படும்.

**உ. திருமண உதவித்தொகை செலுத்தும் முறை:**

i. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவிகள் பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இதற்காக பயனாளிகள் ஏதேனும் ஒரு பொதுத்துறை வங்கியில் வங்கி கணக்கைத் தொடங்க வேண்டும்.

ii. இத்திருமண உதவித் தொகை அயலகத் தமிழர் நல வாரியம் மூலமாக வழங்கப்படும். தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், இத்திருமண உதவித் தொகைக்கு தேவையான நிதி இவ்வாணையரகம் வாயிலாக பெற்று வாரியத்திற்கு வழங்கப்படும்.

4. மேலும் இத்திட்டம் குறித்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையர் அவர்கள், பணியின் பொருட்டு அயல்நாடுகளுக்கு சென்று அங்கு இறக்கும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன் / மகளுக்கு திருமண உதவித்தொகை வழங்கி உரிய அனுமதி வழங்கி ஆணை வெளியிட அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021–ஆம் நாளிட்ட செய்தி வெளியீட்டில் (செய்தி வெளியீடு எண்.842) அறிவிக்கப்பட்டுள்ள "வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, திருமண உதவித் தொகை வழங்கப்படும்" என்ற திட்டத்தினை மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுத்துவதற்காக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியை கணக்கிட்டு அதன் பின்னர் அதற்கான ஒதுக்கீட்டினை கோரி உரிய கருத்துருவை அரசிற்கு அனுப்பிவைக்குமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

த.பி.பா..

7. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அலுவல் சார்பற்ற எண். 23048/நிதி(து.செ./வ.செ.பொ.II)/2023, நாள் 07.08.2023 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை - 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

நகல்
மாநில கணக்காயர், சென்னை-18.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முகக் உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம்
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.
உள்ளுரை தணிக்கை அலுவலர், சென்னை - 9.

இ.கோ/உ_திரி.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

18/8/2023

**பிரிவு அலுவலர்**

18/8/23